அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 99/2016
தேதி : 23/05/2016

# ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே
# “சொன்னதைச் செய்யும் முதலமைச்சர்”

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு
## சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் பாராட்டு

நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது சில கட்சித் தலைவர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்து முதலமைச்சர் பொறுப்பேற்றதும், முதல் கையெழுத்தாக இந்த திட்டத்தில் கையெழுத்திடுவோம், அந்த திட்டத்தில் கையெழுத்திடுவோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து வந்தார்கள். ஆனால் தேர்தல் பிரச்சாரத்தின் போது அப்படி எந்த ஒரு அறிவிப்பும் வெளியிடாமல், தேர்தலில் மாபெரும் வெற்றியடைந்து முதலமைச்சராக பொறுப்பேற்றதும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை நடைமுறைபடுத்த உத்தரவிட்டு அது தொடர்பான கோப்புகளில் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

தொடக்கப் பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்கப்படும் என்ற உத்தரவு, படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்ற நோக்கில் மதுபான கடைகளில் பகல் 12 மணியிலிருந்து இரவு 10 மணி வரை விற்பனை நேரம் குறைப்பு, 500 மதுபானக் கடைகள் மூடல், தாலிக்கு தங்கம் 4 கிராம் என்பதிலிருந்து 8 கிராமாக அதிகரிப்பு, 100 யூனிட் வரை இலவச மின்சாரம் கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் என்று தங்கள் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டிருந்த பல திட்டங்களில் சிலவற்றை ஆட்சி பொறுப்பேற்ற முதல் நாளே நடைமுறைப்படுத்த உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு பிரச்சாரம் செய்த போது எதிர்க்கட்சியினர் இவை எல்லாம் வெறும் அறிவிப்புகளாக தான் இருக்கும், எவற்றையும் நடைமுறைபடுத்தமாட்டார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து வந்த நேரத்தில் அவற்றை பொய்யாக்கும் விதமாக ஆட்சி பொறுப்பேற்ற சில நிமிடங்களிலேயே அவற்றில் சிலவற்றை நிறைவேற்றுவதற்கான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து கூடிய விரைவில் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கான உத்தரவை பிறப்பித்து, அவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள். தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதமாக, அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் நல்லாட்சி தொடரும் என்பதற்கான முன்னோட்டம் முதல் நாளிலேயே நிரூபணம் ஆகியிருக்கிறது என்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார்
தலைவர்